# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2011 - 2012

# வளர் தமிழ் 9

சுட்டெண்:........................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழின் இளமைத் தன்மை கருதி அதனை இவ்வாறு கூறுவர்.
   அ) தீந்தமிழ் ஆ) பைந்தமிழ் இ) செந்தமிழ் ஈ) தேன்தமிழ்
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐
2. தமிழரின் புத்தாண்டு நாள்
   அ) மாட்டுப்பொங்கல் ஆ) வாணிவிழா இ) ஆடிப்பிறப்பு ஈ) தைப்பொங்கல்
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐
3. சீரும் சிறப்பும் என்பது
   அ) அடுக்குமொழி ஆ) இணைமொழி இ) இரட்டைமொழி ஈ) தொடர்மொழி
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐
4. தென்திசையைப் பார்க்கின்றேன் என்ற பாடலைப் பாடியவர்,
   அ) திருவள்ளுவர் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) ஔவையார்
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐
5. இலங்கையைத் தன்னாட்சிக்குள் உட்படுத்திய சோழமன்னன்
   அ) இராசேந்திரன் ஆ) இராசராசன் இ) குலோத்துங்கன் ஈ) எல்லாளன்
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐
6. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடலைப் பாடியவர்
   அ) மகாகவி து.உருத்திரமூர்த்தி ஆ) பாரதியார் இ) பாவேந்தர் ஈ) ஔவையார்
   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. விடிவெள்ளி எழுவது

அ) தெற்கே ஆ) கிழக்கே இ) மேற்கே ஈ) வடக்கே

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. கிறுகிறுத்தல் என்றால்

அ) மயங்குதல் ஆ) உணர்தல் இ) தன்னைமறத்தல் ஈ) சினத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பின்வருவனவற்றுள் பகாச்சொல்லுக்கு எடுத்துக்காட்டு

அ) வருகிறான் ஆ) நிலம் இ) காவலன் ஈ) தமிழர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பகுசொல்லின் இறுதியில் வரும் உறுப்பு

அ) பகுதி ஆ) இடைநிலை இ) சந்தி ஈ) விகுதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இலங்கையில் உள்ள மிகப்பெரிய தாழிக்காடு

அ) கந்தரோடை ஆ) ஆனைக்கோட்டை இ) பொம்பரிப்பு ஈ) மட்டக்களப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. நாகதீபம் பற்றிக் குறிப்பிடும் பழந்தமிழ் நூல்

அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம் இ) திருக்குறள் ஈ) நாலடியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. திரிதல் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு

அ) அறம் + இல்லை ஆ) பணம் + வரவு இ) நாள் + காட்டி ஈ) பலா + பழம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. வெறுவான வெளிமீது கரகங்கள் ஆடுவது

அ) புயல் ஆ) மதி இ) கதிரவன் ஈ) முகில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. படுகளம் என்ற சொல் குறித்து நிற்பது

அ) ஆடுகளம் ஆ) போர்க்களம் இ) விளையாட்டுக்களம் ஈ) ஓடுகளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. மகாவம்சம் எரிக்கப்பட வேண்டிய நூல் எனக் கூறியவர்

அ) லயனல் சரத் ஆ) ஈ.டபிள்யூ அதிகாரம் இ) சிறிலால் ஈ) தொலமி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. மகாவம்சம் எழுதப்பட்ட மொழி

அ) எலு ஆ) பாளி இ) சிங்களம் ஈ) தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. ஆற்றங்கரை என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ) ஆற்றங் + கரை ஆ) ஆற்ற + ங்கரை இ) ஆறு + கரை ஈ) ஆறு + ங்கரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. தனிநாயகம் அடிகள் வெளியிட்ட ஆங்கிலச் சிற்றிதழ்

அ) தமிழ்ப்பண்பாடு ஆ) தமிழ்மறை இ) ஒடிசி ஈ) இலியட்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பெயர்ச்சொற்களின் வகை

அ) எட்டு ஆ) பத்து இ) ஆறு ஈ) நான்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. தளிர் அன்ன கை இதில் வரும் உவமானம்

அ) அன்ன ஆ) தளிர் இ) கை ஈ) மென்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. வீடு + முற்றம் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) வீடுமுற்றம் ஆ) வீட்டின்முற்றம் இ) வீடுன்முற்றம் ஈ) வீட்டுமுற்றம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. தமிழ் மன்னனான எல்லாளனைக் கொன்றவன்

அ) அசேலன் ஆ) துட்டகெமுனு இ) குத்திகள் ஈ) விஜயன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. இடைக்கற்காலத்தை இவ்வாறும் கூறுவர்

அ) பெருங்கற்காலம் ஆ) சிறுகற்காலம்

இ) பழைய காலம் ஈ) இடைக்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. கடற்றொழிலாளர் என்பவர்

அ) உழவர் ஆ) மீனவர் இ) பாமரர் ஈ) இடையர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தாயின் தாலாட்டில் தாய் தன் மகனை எவ்வாறு வளர்த்தாள்?

அ) தீயவனாய் ஆ) தன்னலமாய் இ) வீரனாய் ஈ) கோழையாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பெயர்ப் பகுசொல்லுக்கு எடுத்துக்காட்டு

அ) ஓடினான் ஆ) உண்கிறது இ) காவலன் ஈ) கை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தனிநாயகம் அடிகளார் சீன, மலாய் மொழிகளில் மொழி மாற்றுவித்த நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) திருக்குறள்

இ) நாலடியார் ஈ) வளையாபதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. அதியமான் நெல்லிக்கனியை கொடுத்தது

அ) மனைவிக்கு ஆ) துறவிக்கு

இ) ஔவையாருக்கு ஈ) சோழனுக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பிட்டும் மாம்பழமும் சேர்த்து உண்ணச் சுவையாக இருக்கும். இதில் வந்த இடைச்சொல்,

அ) பிட்டு ஆ) உம் இ) மாம்பழம் ஈ) பழம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தனி மாந்தர் சேர்ந்து உருவாவது குமூகம்: குமூகங்கள் பல சேர்ந்து உருவாவது நாடு. அதனால், தனிமாந்தர்க்கும் குமூகத்திற்கும் நாட்டுக்குமிடையே பெருந்தொடர்புண்டு. தனிமாந்தர்களின் உயர்வும் தாழ்வும் நாட்டின் உயர்வையும் தாழ்வையும் நிர்ணயிக்கின்றன. தனிமனிதர் சிறப்புற்று வாழ்வாங்கு வாழ்வதற்கு மட்டுமன்றி; அனைத்துத் தேவைகட்கும் ஆதரமாய் விளங்குவது கல்வி. கல்வியானது கண்ணிலும் மேலாகப் போற்றப்படுவது அன்றியும் எல்லையறியாப் பெருங்கடல்போற் பரந்தது. குமூகங்களை மலர்வித்து; நாட்டை உயர்நிலை அடையச் செய்யும்.

வாழ்வு வளம்பெற உதவும் இத்தகைய கல்வியை கற்றல் அவசியமாகின்றது.

''கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே''

**கல்வியானது மக்களின் பண்பாடு, அறிவு, ஆற்றல் என்பவற்றை விருத்திசெய்து நல்வாழ்வுக்கு வழிகோலுகின்றது. மக்களின் வளமானவாழ்வு பொருளாதார விருத்தியை, அடிப்படையாகக் கொண்டது என்றால் அது தவறானதல்ல. அதனால் பொருளாதார விருத்திக்கும் கல்வியே பெரிதும் துணைபுரிகின்றது. தனிமனிதருக்கும் நாட்டுக்கும் ஏற்ற வகையில் கல்வி அமைய வேண்டும். ஒரு நாட்டின் கல்விமுறையானது ஏட்டுக்கல்வியாக அமையாது மக்களின் செயற்றிறனைத் தூண்டி, நாட்டில் நிறைந்து கிடக்கும் மூலவளங்களைப் பயன் படுத்திக் கொள்ளத்தக்கவாறு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக் கூடியவகையில் அமையவேண்டும்.**

1. ஒரு நாட்டின் கல்விமுறையானது எவ்வாறானதாக அமையவேணடும்?

______________________________

______________________________

2. ஒரு நாட்டின் உயர்வையம் தாழ்வையும் நிர்ணயிப்பது எது?

______________________________

______________________________

3. கல்வியானது எவ்வாறு மக்களின் நல்வாழ்வுக்கு வழிகோலுகின்றது?

______________________________

______________________________

4. மக்களின் வளமானவாழ்வு எதை அடிப்படையாக்கொண்டுள்ளது?

______________________________

______________________________

5. பிச்சை புகினும் கற்கை நன்றே? என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வதென்ன?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. ‘மீண்டும் தொடங்கும் மிடுக்கு’ என்ற பாடலில் பயிர் வாடிய போது பெய்யாத மழை பின்னர் என்ன செய்தது?

______________________________

______________________________

2. பண்டைய நாட்களில் வடபகுதியில் மன்னராட்சி இருந்தமை பற்றி அறியும் சான்று என்ன?

______________________________

______________________________

3. ‘தாயின் தாலாட்டு’ என்ற பாடலில் போர்க்களத்தில் இருந்து தன் மகனின் எத்தகைய வீரச் செய்திகள் அத்தாய்க்குக் கிடைத்தன?

______________________________

______________________________

4. மகாவம்சம் எழுதப்பட்ட நோக்கங்கள் எவை?

______________________________

______________________________

5. விசயன் இலங்கைக்கு வரமுன்னர் அங்கு வாழ்ந்த ஆதிக்குடிகள் யாவர்?

______________________________

______________________________

(புள்ளிகள் 15)

**4) கீழே தரப்பட்டுள்ள இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.**

1. பகுபத உறுப்புகள் எவை?

______________________________

______________________________

2. அறுவகைப் பெயர்ச் சொற்களையும் தருக.

______________________________

______________________________

3. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

பொன் + தாலி = ______________

களம் + நிலை = ______________

பலா + இலை = ______________

4. தேன்மொழி இதில் இடம்பெற்றுள்ள

உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றை எழுதுக.

______________________________

______________________________

______________________________

______________________________

5. பின்வரும் அடுக்கிடுக்குத்தொடர்களின் பொருள் விளங்கச் சொல்லியங்கள் எழுதுக.

சின்னஞ்சிறிய : ______________________________

______________________________

தன்னந்தனியே: ______________________________

______________________________

பென்னம் பெரிய: ______________________________

______________________________

(புள்ளிகள் 15)

5) **பாடலைப்படித்து, கீழேயுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.**

ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓரமெல்லாம்
கீரியின் உடல் வண்ணம்போல்
மணல்மெத்தை அம்மெத் தைமேல்
நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும் வீழும்
புரண்டிடும் பாராய் தம்பி

வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வ தைப்போல்
துள்ளியே அலைகள் மென்மேல்
கரையினிற் சுழன்று வீழும்!
வெள்ளலை கரையைத் தொட்டு
மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடி ஆடிப்
பெரியதோர் வியப்பைச் செய்யும்

1. பெருங்கடல் எங்கேயுண்டு?

______________________________

______________________________

2. மணல் மெத்தை மேல் ஏறும் அலையை எதற்கு ஒப்பிட்டுள்ளார் கவிஞர்?

______________________________

______________________________

3. வெள்ளை அன்னக்கூட்டத்தின் செயல் என்ன?

______________________________

______________________________

4. இக்காட்சியைப் பார்க்கிறவரை வியப்படையச் செய்பவை எவை?

______________________________

______________________________

5. மணல் மெத்தை எதைப் போல இருக்கின்றதாம்?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

6) **கீழ்வரும் பந்தியை உமது வாழிட மொழியில் எழுதுக.**

ஒரு வீட்டில் அம்மா அப்பா அண்ணன் தங்கை நால்வரும் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் அப்பா அப்பம் வாங்கி வந்தார். தங்கை நிலா கையில் எடுத்து வைத்துக் கொண்டு யாருக்கும் தர மாட்டேன் என்றாள். அம்மா அண்ணனுக்கும் கொடுத்துச் சாப்பிடும்படி கூறினார். கொடுக்க மாட்டேன் என அழுதாள். பின்னர் அதை முற்றத்தில் இருந்து சாப்பிடத் தொடங்கினாள். அப்போது ஒரு காகம் அவள் அருகே வந்திருந்தது. அவள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தது. கையில் இருந்த அப்பத்தில் ஒரு துண்டைக் காகத்திற்குப் போட்டாள். காகம் அதைச் சிறு துண்டுகளாக்கியது. கா.... கா என்று எல்லாக் காகங்களையும் அழைத்தது. எல்லாக் காகங்களுடனும் சேர்ந்து அத் துண்டுகளைப் பகிர்ந்து உண்டது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த நிலா தன் தவறை உணர்ந்தாள். தன்னிடம் இருந்த மிகுதி அப்பத்தை அண்ணனுக்குக் கொடுத்து உண்டு மகிழ்ந்தாள்.

(புள்ளிகள் 05)

7. **கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழின் காவலன் தனிநாயகம் அடிகளார்
- இலங்கையின் முதற்குடிகள் பற்றி நீர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.
- நீர் கண்டு களித்த ஓர் இயற்கைக் காட்சி

(புள்ளிகள் 15)